# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,699 - 1959 මාර්තු 13 වැනි සිකුරාදා — 13 3 1959

11,699 ம் இலக்கம் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

## பதவி வெற்றிடம்

### தமிழ் தட்டச்சாளர்—மொழிபெயர்ப்பாளர் பதவி, உள்ளூராட்சிச் சேவை

மேற்படி பதவிக்கு உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் முதலில் யாழ்ப்பாணம் மாநகர சங்கத்தில் நியமிக்கப்படுவார்.

2. **சம்பளம்.**—வருடத்துக்கு ரூ. 1,620 முதல் வருடாவருடம் ரூ. 120 வீதமான 18 சம்பள உயர்வுகளுடன் வருடத்துக்கு ரூ. 3,780 வரை. இச்சம்பள விகிதத்தில் வருடச் சம்பளம் ரூ. 2,820 ஆவதற்குமுன் திறமைத் தடைப் பரீட்சையுண்டு.

3. இப்பதவிக்கு இளைப்பாற்றிச் சம்பளமுண்டு. இந்த நியமனம் முதலில் மூன்று வருட காலத்துக்கு பரீட்சார்த்தமானதாயிருக்கும்.

4. **தேவையான தகைமைகள் :**—அபேட்சகர்கள்—

(i) தமிழில் லண்டன் பல்கலைக் கழக பொதுக் கல்வித் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ; அல்லது

(ii) தமிழ் (விசேட தமிழல்ல) ஒரு பாடமாகவுள்ள உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரம் ; அல்லது

(iii) தமிழ் ஒரு பாடமாக கலையில் இண்டர்மீடியட்/முதல்தரம்/பொது தகைமை ; அல்லது

(iv) தமிழில் தேர்ச்சிப் பரீட்சையும் (உயர்தரம்) ;

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தாரதரப் பத்திரம் பெற்ற சமயத்திலேனும் அதற்குப் பிறகேனும் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலாயினும் பொதுக் கல்வித் தராதரப் பரீட்சை (சாதாரண தரம்) யிலாயினும் ஆங்கில பாஷையில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமையான சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரமாவது (தமிழ் அல்லது ஆங்கிலம்) ; அல்லது

(ஆ) பொதுக் கல்வித் தராதரப் பத்திரமும் ஆங்கில பாஷையில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமையான சித்தியுடனும் எப்பாஷையிலேனும் மற்றும் ஐந்து பாடங்களில் சித்தியுடனும் பொதுக் கல்வித் தராதரப் பத்திரமாவது வைத்திருக்கவேண்டும்.

**கவனிக்க :** பொதுக் கல்வித் தராதரப் பத்திரத்துக்கு (சாதாரண தரம்) தேவையான ஆறு பாடங்களில், ஐந்து பாடங்கள் ஒரே சமயத்தில் சித்தியெய்தப் பெற்றனவாயிருத்தல் வேண்டும்.

(v) 1959 ம் ஆண்டு மார்ச் 30 ந் திகதியில் 19 வயதுக்கு மேற்பட்டவர்களாயும் 25 வயதுக்கு குறைந்தவர்களாயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க அல்லது உள்ளூராட்சிச் சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிப்பவர்கள் விஷயத்தில் கூடிய வயது எல்லை 45 ஆகும். (பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதியொன்று சேர்த்தனுப்பப்படவேண்டும். சத்தியக் கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(மொழிபெயர்ப்பு வேலையிலும் தட்டச்சடித்தலிலும் அனுபவமுள்ளவர்கள் விரும்பப்படுவர்).

5. அபேட்சகர்கள் மொழிபெயர்ப்பு வேலையிலும் தட்டச்சடித்தலிலும் ஒரு எழுத்துப் பரீட்சைக்கு அமரும்படி கேட்கப்படுவர். அப்பரீட்சை முடிவுகளின் பேரில் நேர்முகப் பரீட்சைக்கான தெரிவு நடைபெறும்.

6. இந்த அரசாங்க வர்த்தமானியின் 4 ம் பாகத்தின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்கு நியமனங்கள் செய்வது சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. விண்ணப்பங்கள், நியமனங்கள் செய்வது சம்பந்தமான பொது நிபந்தனைகளோடு சேர்க்கப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில், 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்க வேண்டும்.

8. எல்லா விண்ணப்பங்களும் கிடைத்தமை அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை அறிவிக்கப்பெறாத விண்ணப்பகாரர் எவரும், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறினால் விண்ணப்பகாரரின் கோரிக்கை எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

ஈ. எவ். டயஸ் அபயசிங்க,
தலைவர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைக் கந்தோர்,
தபால் பெட்டி 530, கொழும்பு,
1959 ம் ஆண்டு மார்ச் மீ 9 ந் உ.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதத்தின் நான்காம் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 26 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 23 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 10 ந் திகதி.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.